# e - thaksalawa (கல்விக்கூடம்)


## க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

கல்விக்கூடம்

The National e-learning Portal for The General Education

**History**

**வரலாறு**



| கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை– 2020 | | |
|---|---|---|
| **33 -T** | **வரலாறு I** | **ஒருமணித்தியாலம்** |

**கவனிக்க :-**

**i)** **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
**இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.**

**ii)** **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**iii)** **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

**iv)** **அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.**

01. இலங்கையின் புராதன கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் பெயர் யாது?
(1) பிராமி எழுத்துக்கள் (2) சமஸ்கிருத எழுத்துக்கள்
(3) பாளி எழுத்துக்கள் (4) கியூபிக் எழுத்துக்கள்

02. கம்பளைக் காலத்திலிருந்து கோட்டை வரையான காலப்பகுதிக்குரிய அரசியல் தகவல்களை உள்ளடக்கி எழுதப்பட்ட நூல்.
(1) நிகாயசங்கிரஹய (2) போதிவம்சம் (3) ராஜா வலிய (4) பூஜா வலிய

03. 3800 வருடங்களுக்கு முன்னர் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படும் வட பகுதியில் உள்ள பிரதேசத்தினைப் பின்வரும் விடைகளில் இருந்து தெரிவு செய்க.
(1) ஜம்புகோளப்பட்டினம் (2) இரணைமடு
(3) ஆனைக்கோட்டை (4) மாதோட்டை

04. பெண்கள் கண்மையிடுவதற்கு உலோகத்திலான குச்சி உபயோகித்தமை மற்றும் உடம்பில் வர்ணம் பூசுவதற்கு மஞ்சள், சிவப்பு நிறத்திலான கற்கள் பயன்படுத்தப்பட்டமை ஆகியன இடம்பெற்றதாகக் கருதப்படும் காலம்.
(1) வரலாற்றுக்கு முற்பட்டகாலம் (2) முன்வரலாற்றுக் காலம்
(3) ஆரம்ப வரலாற்றுக் காலம் (4) வரலாற்றுக்காலம்

05. இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலக் குடியிருப்புக்களின் அமைவிடத்தினைத் தீர்மானிப்பதில் மையமாக அமைந்திருந்த விடயம் யாது?
(1) நதி (2) காடு (3) குளம் (4) காலநிலை

06. ஆரம்பகாலங்களில் நதிகளுக்கு அருகாமையில் குடியிருப்புக்கள் அமைக்கப்படாமைக்கான காரணம்.
(1) ஈரலிப்பான பிரதேசமாக இருந்தமை.
(2) நீர்த்தேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இருந்தமை.
(3) வளமான மண் காணப்பட்டமை.
(4) நதியின் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்குரிய உத்திகள் கண்டறியப்படாமை

07. கி.மு. 2400 வருடங்களுக்கு முன்பிருந்தே இலங்கையில் முன்னேற்றகரமான விவசாய சமூகம் காணப்பட்டது என்பதனை உறுதிப்படுத்திய புரதான மயானங்கள் கண்டறியப்பட்ட இடங்கள்.
(1) பெரகல, ஹல்துமுல்ல (2) இப்பன்கட்டுவ,உடரஞ்சாமடம
(3) கல்சொகன்,யட்டிகல்பொத்த (4) பெரகல,கல்சொகன்

08. உலர் வலயத்தின் பல பிரதேசங்களில் பரந்து காணப்பட்ட குடும்பங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்.
(1) கமிக (2) கிருகபதி (3) கிராமிக (4) பத்த

❖ **கீழே தரப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு 9 ஆம், 10 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - இந்துசமுத்திரத்தின் சர்வதேச வர்த்தகம் கிழக்குப் பிரதேசத்திற்கு நகர்ந்தமையை கருத்திலெடுத்து தலை நகரைமாற்றி அமைத்தமை.

B - அரசவரி அறவீட்டு முறையை முறைமைப் படுத்தியமை.

C - தலதாமாளிகையின் பாதுகாப்பிற்காக வேளைக்காரப் படையை நியமித்தமை.

D - சர்வதேச துறைமுகமான மாந்தையை அனுராதபுர ஆட்சியாளன் எல்லாளனிடமிருந்து மீட்டெடுத்தமை.

E - தனிப்பட்ட உள்ளூராட்சிப் பிரதேசங்களை நிர்வகிப்பதற்காக அமைச்சர்களை நியமித்தமை.

09. வசப மன்னனுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிப்பிடும் விடை எது?

(1) A, E (2) B, D (3) B, E (4) C, D

10. முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி எது?

(1) B, E (2) C, D (3) A, D (4) A, C

11. புரதான காலத்தில் இலங்கையில் நிலவிய நிர்வாகத்தின் தலையாய நோக்கமாக இருந்தவை.

(1) நாட்டு மக்களிடையே சமாதான சகவாழ்வை உருவாக்குதலும் அவர்களுடைய நலன்களைக் கவனித்தலும்.

(2) வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி பொருளாதாரத்தை மேம்படுத்துவது.

(3) வெளிநாடுகளுடன் திருமணத் தொடர்புகளைப் பேணிக்கொள்வதும் அயல் நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்வதும்.

(4) நாட்டுமக்களின் நலன்களைக் கவனித்தலும் அயல் நாடுகளுடன் போரிலீடுபடுதலும்.

12. தென்னிந்தியாவின் கேரோளாவில் இருந்து இலங்கைக்கு வருகைதந்து கடமையாற்றிய படையினருக்கு வழங்கப்பட்ட பெயர்.

(1) காம்போஜகர் சேனை (2) வலஞ்சியர் சேனை

(3) நானாதேசி சேனை (4) அஹம்படிசேனை

13. புரதான இலங்கையில் ஊதுளை என்னும் கருவியைப் பாவித்து இரும்பை உருக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இடம் எது?

(1) பெரகல (2) பலாங்கொடை (3) சமனெலவெவ (4) தெஹிகஹ அலகந்த

14. குளத்தில் அலைகளினால் அணைக்கட்டு அரிக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்காக, அணைக்கட்டின் சரிவில் கற்களைப் பதித்து உருவாக்கப்பட்ட குளத்தின் உறுப்பு.

(1) கால்வாய் (2) அலைதாங்கி (3) மடைக்கதவு (4) ஈரக்கலிங்கல்

15. மகாபராக்கிரமபாகு மன்னனை நினைவு படுத்துவதற்காக தெடிகம என்ற இடத்தில் அமைக்கப்பட்ட விகாரை எது?

(1) வேவல் கட்டிய சைத்திய (2) பியாங்குதிஸ்ஸ

(3) சூதிகரசைத்திய (4) கிரிவிகாரை

16. நான்காம் உதய மன்னனால் பொறிக்கப்பட்டதாகக் கருதப்படும் சொரபொரவாவித் தூண் கல்வெட்டின் படி போயாதினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து தண்டப்பணமாக அறவிடப்பட்ட வரி.

(1) சுங்கவரி (2) தக்கபதி (3) போஜக்கபதி( 4) எண்ணெய் வரி

❖ **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை அவதானித்து 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - கோட்டை இராசதானிக்கு ஆறாம் பராக்கிரமபாகு மன்னனாதல்.

B - யாப்பகுவாவை முதலாம் புவனேகபாகு தலைநகரமாக்கியமை.

C - இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் கலிங்கமாகனைத் தோற்கடித்தமை.

D - அம்புலுகலகுமாரன் எட்டாம் வீரபராக்கிரமபாகு என்னும் பெயரில் கோட்டை இராச்சிய மன்னனாதல்.

E - முதலாம் காசியப்பன் சிகிரியாவைத் தனது நிர்வாக மத்திய நிலையமாகத் தெரிவுசெய்தமை.

17. கி.பி 1411 ஆம் ஆண்டு சீனாவில் யுங்லோ என்னும் பேரரசன் ஆட்சி செய்யும் போது இலங்கைக்கு வருகை தந்த தளபதி செங்ஹோ அறிந்திருக்க முடியாத விடயங்கள் அடங்கிய விடை.

    (1) A, D (2) B, E (3) C, D (4) D, E

18. கி.பி 1344 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த அரேபியரான இபின் பதூதா அறிந்திருக்கக் கூடிய விடயங்கள்.

    (1) A, D (2) B, C (3) D, E (4) A, B

19. போர்த்துக்கேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்றிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு யுத்தம் நடைபெற்ற இறுதி இடம்.

    (1) தந்துரே (2) கன்னொருவ (3) ரந்தெனிவெல (4) பலன

20. கண்டி இராச்சியத்தில் பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்.

    (1) விகாரகம் (2) தேவாலகம் (3) நிந்தகம் (4) பரவேனிகம்

21. கண்டி இராச்சியத்தின் பிரதான நிர்வாக அலகுகள் நிரல் I இலும் அவற்றை நிர்வகித்த அதிகாரிகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் ஐ இற்கு ஏற்ப நிரல் II இனை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) ரட்ட | A. கோறளை |
| 2) திஸாவை | B. அத்துக்கோறளை |
| 3) கோறளை | C. திஸாவைகள் |
| 4) பற்று | D. ரட்டேரால |

    (1) DCAB (2) DBAC (3) BADC (4) ABCD

22. மறுமலர்ச்சிக் காலத்தில் மானிடவாதம் முதன்மை பெற்றதனால் ஏற்பட்ட மாற்றம் யாது?

    (1) தர்க்கரீதியில் நோக்கும் திறன் ஏற்பட்டது.
    (2) கலைஞர்கள் வகுப்புக்களின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டனர்.
    (3) கலைப்படைப்புக்கள் சமயசார்பாக அமைந்தமை.
    (4) இறையியல் பாடங்கள் முக்கியப் படுத்தப்பட்டன.

23. பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்படுவதற்குப் பொருத்தமாக இருந்த பின்னணிகளில் ஒன்றினைத் தெரிவு செய்க.
   (1) நிதி நிறுவனங்கள் காணப்படாமை.
   (2) அரசு ஆதரவு குறைவாகக் கிடைத்தமை
   (3) உற்பத்திப் பொருட்களுக்கு குறைவான விலையைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.
   (4) இலண்டன் நகரம் மூலம்பொருள், மூலதனம், முடிவுப்பொருள் முதலியவற்றை விநியோகிக்கும் மத்திய நிலையமாக விளங்கியமை.

24. கைத்தொழில் புரட்சியினால் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றம்.
   (1) பொதுவுடமைவாதம், தாராண்மைவாதம் ஆகிய கொள்கைகள் தோற்றம் பெற்றன.
   (2) ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார முறை உருவாகியது.
   (3) நகரங்கள் உருவாகியது.
   (4) சேரிப்புறங்கள் உருவாகியது.

25. ஆங்கிலேயர் ஆசியாவுக்கு வருகை தந்த ஆரம்ப காலத்தில் தமது வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்திக் கொண்ட பிரதேசம்.
   (1) தென்கிழக்கு ஆசியப் பிரதேசம்  (2) மத்தியஆசியப் பிரதேசம்
   (3) தென் ஆசியப் பிரதேசம்  (4) தூர கிழக்குஆசியப் பிரதேசம்

26. ஜோன் பைஸ், ஹியுபோயிட் ஆகிய ஆங்கிலேயத் தூதுவர்கள் இலங்கைக்கு வருகைதந்ததன் நோக்கமாக இருந்தவிடயம்.
   (1) ஒல்லாந்தரை இலங்கையில் இருந்து வெளியேற்றுவது
   (2) இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது
   (3) திருகோணமலைத் துறைமுகத் தொடர்பான ஒப்பந்தத்தில் கண்டி மன்னனைக் கைச்சாத்திடச் செய்வது
   (4) ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் நடைபெறும் மோதல்கள் தொடர்பாக விளக்கமளித்தல்

❖ **கீழே A,B,C,D எனத்தரப்பட்ட பிரித்தானிய ஆளுனர்களின் பெயர்களை அவதானித்து அவர்களின் பணிகளுடன் தொடர்புடைய எழுத்துக்களைத் தெரிவு செய்க.**

A - ஆளுநர் எட்வேட் பாண்ஸ்
B - ஆளுநர் ஹென்றிவோட்
C - ஆளுநர் பிறவுண்றிக்
D - ஆளுநர் பிரட்டிக் நோர்த்

27. இலங்கையில் கண்டி–கொழும்பு பிரதானவீதி அமைக்கப்பட்டதுடன் தொடர்புடைய ஆளுநர்.
   (1) A  (2) B  (3) C  (4) D

28. இலங்கையில் புகையிரத வீதிகள் அமைப்பதில் ஈடுபட்ட ஆளுனர்.
   (1) A  (2) C  (3) D  (4) B

❖ **கீழே A,B,C,D,E எனத் தரப்பட்ட கூற்றுக்களை அவதானித்து 29, 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - நிர்வாகக்குழு முறை அறிமுகம்.
B - இனவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம்.
C - சர்வஜன வாக்குரிமை அறிமுகம்.
D - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை அறிமுகம்.
E - நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

29. கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடங்கும் விடயங்களைத் தரும் எழுத்துக்கள்.

(1) A, B (2) B, C (3) B, E (4) D, E

30. டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய எழுத்துக்கள்.

(1) A, C (2) D, E (3) B, C (4) C, E

31. இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்கள்.

(1) காமக, மகாவலி, பெலகமடு, உன்னிச்சை.

(2) காகம, பெரகம, மினிப்பே, உன்னிச்சை.

(3) பத்மெடில்ல, கிரிந்தலை, கல்ஓயா, கந்தளாய்.

(4) இரணைமடு, பானியன்கடவல, தேவஹுூவ, கல்ஓயா

32. இலங்கையில் பின்பற்றப்பட்ட இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை என்பது.

(1) வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக அவற்றை இலங்கையிலேயே உற்பத்தி செய்து கொள்வது.

(2) வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து கொள்வது.

(3) இலங்கையில் இருந்து பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து கொள்வது.

(4) இருநாடுகள் தமக்கிடையே பொருட்களைப் பரிமாறிக் கொள்வது.

❖ **கீழே A B C D எனக் கருத்துச் சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் காட்டப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துக்களிடையேயான தொடர்பினைப் பரிசீலித்து 33 தொடக்கம் 36 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. முதலாம் உலகமகாயுத்தம்
    2. ஐக்கியநாடுகள் சபை

B - 1. இரண்டாம் உலகமகாயுத்தம்
    2. இஸ்ரேல்

C - 1. கடலோடிஹென்றி
    2. நாடுகாண் பயணம்

D - 1. சூழல் மாசடைதல்
    2. கைத்தொழில்கள் வளர்ச்சியடைதல்

33. முதலாவதன் அதிகரிப்பிற்கு இரண்டாவதன் அதிகரிப்பு காரணமாக இருப்பதனை எடுத்துக் காட்டும் சோடி.

(1) A (2) D (3) C (4) B

34. இரண்டாவது உருவாவதற்கு முதலாவது நிகழ்வு காரணமாக அமைந்த கருத்துச்சோடி.

(1) C (2) A (3) B (4) D

35. முதலாவது நிகழ்விற்கும் இரண்டாவது நிகழ்விற்கும் இடையில் தொடர்பு இல்லாத தன்மையை எடுத்துக் காட்டும் கருத்துச் சோடி.

(1) B (2) C (3) D (4) A

36. முதலாவதின் அனுசரணையின் காரணமாக இரண்டாவது வெற்றி பெற்றமையை எடுத்துக் காட்டும் கருத்துச் சோடி.

(1) C (2) A (3) B (4) D

❖ **கீழே A, B ஆகிய கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 37, 38 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - லுசிடானியாக் கப்பல் தாக்கப்படுதல்.

B - பேர்ள் துறைமுகம் தாக்கப்படுதல்.

37. முதலாம் உலக மகாயுத்தத்தில் ஐக்கியஅமெரிக்கா ஈடுபடக் காரணமான நிகழ்வு.

(1) A பிழையானது B சரியானது (2) A சரியானது B பிழையானது

(3) A யும் B யும் சரியானது (4) A யும் B யும் பிழையானது

38. இரண்டாம் உலகயுத்தத்தில் ஐக்கியஅமெரிக்கா ஈடுபடக் காரணமான நிகழ்வு.

(1) A யும் Bயும் சரியானது (2) A யும் Bயும் பிழையானது

(3) A பிழையானது B சரியானது (4) A சரியானது B பிழையானது

39. கி.பி 1961 இல் உருவாக்கப்பட்ட அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பிற்கு உதவிபுரிந்த அன்றைய யூகோசெல்வாக்கியா ஜனாதிபதி, மற்றும் எகிப்திய ஜனாதிபதிகளின் பெயர்களை முறையே தெரிவு செய்க.

(1) மார்ஷல் டிட்டோ, அப்துல் கமால் நசார்.

(2) லசார் கொல்சேவிக், ஒசுனிமுபாரக்.

(3) ஸ்ரீபன் மீசின், அன்வர் சாதாத்.

(4) ஜோசப் பிறோஸ் ரிற்றோ, ஜமால் அப்துல் நாசிர்.

40. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ள நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம்.

(1) ஐக்கியநாடுகள் சபையின் வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல்.

(2) செயலாளர் நாயகத்தைத் தெரிவு செய்தல்.

(3) வீற்றோ எனப்படும் இரத்துச் செய்யும் அதிகாரத்தினைப் பயன்படுத்துதல்

(4) சர்வதேச நாடுகளின் உதவியுடன் உலகமக்களின் சமூக, பொருளாதார, கலாசார, சுகாதார அபிவிருத்தியை மேற்கொள்வது.


# e - thaksalawa (கல்விக்கூடம்)

## க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

The National e-learning Portal for The General Education

# History - II

# வரலாறு -II



கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை – 2020

**33** **வரலாறு II** **மூன்று மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

- **பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1. (அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்தின் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கல்ஓயா, கலாவாவி, யான் ஓயா, சிலாபம், யாழ்ப்பாணம், கண்டி, வல்லிபுரம், தந்துரே, மகாகம, மினிப்பே கால்வாய், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கதிர்காமம், (12 புள்ளிகள்)

(ii) இஸ்தான்புல், போர்த்துக்கல், ரோம், யாவா, மும்பை, ஜப்பான். (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - தோணிகலக் கல்வெட்டினைப் பொறிப்பித்த மன்னன்

B - 1521 இல் விஜயபாகு கொள்ளை இடம் பெற்ற போது மாயாதுன்னைக்கு உதவிய கண்டி இராச்சிய மன்னன்.

C - ஆபிரிக்காவின் தென் முனைக்குப் புயல் முனை எனப் பெயரிட்ட போர்த்துக்கேய கடலோடி.

D - இரண்டாம் உலகயுத்தம் நடைபெற்ற காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி.

(04 புள்ளிகள்)

- **A, B எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒளிப்படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.**

(ii)

1. A இனால் காட்டப்பட்டுள்ள இலங்கையின் புராதன நாணயத்தைப் பெயரிடுக.
2. படம் A யினை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகம் எது?
3. மேற்படி நாணயம் மூலம் அறிந்து கொள்ளக் கூடிய விடயங்களில் ஒன்றினைத் தருக.



A

4. மேற்படி படத்துடன் தொடர்புடைய விடயங்களைக் கற்பதற்கு வழங்கப்படும் பெயர் என்ன?

(04 புள்ளிகள்)

(iii)

**B**



1. B இனால் காட்டப்பட்ட படத்தினைப் பெயரிடுக?
2. இது வரையப்பட்டதாகக் கருதப்படும் காலத்தில் ஆட்சி செய்த மன்னனின் பெயர் யாது?
3. மேற்படி படம் வரையப்பட்டிருக்கும் இடம் யாது?
4. இப்படம் குறியீடாக எடுத்துக்காட்டும் விடயங்களில் ஒன்றினைத் தருக. (04 புள்ளிகள்)

## பகுதி II

2. (i) இலங்கையின் அரச சபையில் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட காலத்தில் கீழே A, B, C எனத்தரப்பட்ட பணிகளுடன் தொடர்புடைய நபர்களின் உத்தியோக பூர்வ பெயர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக. (03 புள்ளிகள்)

A - நகர பரிபாலகர்
B - உணவுச்சாலை அதிகாரி.
C - படைகளின் தளபதி
-

(ii) பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய ஆட்சியாளர்களின் பெயர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக. (04 புள்ளிகள்)

A - வைத்திய சாலைகளை நிர்மாணிப்பதில் ஆர்வம் காட்டுதல்.
B - நாட்டில் காணப்பட்ட சகல வைத்தியசாலைகளுக்கும் தேவைப்பட்ட வசதிகளை வழங்குதல்.
C - உபசக்கரோகநாச என்ற தனியான வைத்திய சாலையை அமைத்தல்.
D - கர்பிணித்தாய்மாரின் தேவைக்காக பஸவந்தி நாமசால என்னும் பிரசவ விடுதிகளை அமைத்தல்.

(iii) புராதன இலங்கையில் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்ட முறையை தலைமைத்துவம் மற்றும் பணிகள் என்ற அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நாட்டு மக்கள் அரசனிடமிருந்து எதிர்பார்த்த சேவைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

3. (i) கீழே A, B, C எனத்தரப்பட்ட நதிகளின் கழிமுகத்தில் அமைந்திருந்த பண்டைய துறைமுகங்களின் பெயர்களை அதே ஒழுங்கு முறையில் தருக. (03 புள்ளிகள்)

A - களுகங்கை
B - யான் ஓயா
C - ஜின் கங்கை

(ii) கீழே A, B, C, D எனத்தரப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் எழுதுக.

A - வைத்திய உபகரணங்கள், வைத்திய சாலைகளின் இடிபாடுகள் கண்டறியப்பட்ட அகழ்வு
B - ஒரு நெல்மணி அளவிலான தங்க நகையில் 21 பூக்கள் செதுக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்ட அகழ்வு
C - நிற ஓடுகள் கண்டறியப்பட்ட அகழ்வு
D - இலங்கையின் வீடமைப்பு பற்றிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற முன் வரலாற்றுக்கால அகழ்வு மேற்கொள்ளப்பட்ட இடம்.

(04 புள்ளிகள்)

(iii) புராதன இலங்கையின் மட்பாண்டக் கைத்தொழிலில் பின்பற்றப்பட்டு வந்த தொழில்நுட்பமுறைகளை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி 9 ஆம் நூற்றாண்டளவில் பொறிக்கப்பட்டதாகக் கருதப்படும் சொரபொர வாவித் தூண் கல்வெட்டில் இலங்கையின் உள்நாட்டு வர்த்தகம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

4. ( i) A- 1400 ஆண்டுகளாக இலங்கையின் தலைநகரமாக விளங்கிய நகரம்

B- உருகுணுரட்டையில் அப்பிரதேசத்தின் கலாசாரத்தை எடுத்துக்காட்டும் தன்மையுடன் வளர்ச்சியடைந்த நகரம்.

C - முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் மாயரட்டைப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட தலை நகரம்.

என்பவற்றை A, B, C என்ற ஒழுங்கு முறையில் உமது விடைத்தாளில் எழுதுக.

(ii) கீழே A, B, C, D எனத்தரப்பட்டுள்ள ஒவ்வொரு தகவலுக்குமுரிய விடையை ஒழுங்கு முறையாகத் தருக.

A - மகாபராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதி தேவியை மூன்று முறை அரசியாக முடிசூட வைத்த வம்சம்.

B - தென்கிழக்காசியாவின் மலாயா குடாநாட்டின் வட பகுதியிலிருந்து இலங்கையை ஆக்கிரமித்தவன்.

C - முதலாம் புவனேகபாகு மன்னன் வர்த்தகத் தொடர்பினை ஏற்படுத்திய நாடு.

D - கி.பி. 1302 இல் நான்காம் பராக்கிரமபாகு குருநாகல் இராசதானியின் ஆட்சியாளன் எனக் குறிப்பிடும் தமிழ் நூல். (04 புள்ளிகள்)

(iii) தம்பதெனியா இராசதானியை ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பணிகளை

A - அரசியல்

B - இலக்கியம்

என்ற தலைப்பினடிப்படையில் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை மூன்று காரணியடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

5. (i) கண்டி இராச்சிய மன்னர்களுக்கும் போர்த்துக் கேயருக்கும் இடையே யுத்தம் நடைபெற்ற மூன்று இடங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) கண்டி இராசதானியில் மன்னனால் மட்டும் தீர்ப்பு வழங்கக்கூடியதாக இருந்த நான்கு குற்றங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தரை இலங்கைக்கு வரவழைத்ததன் நோக்கங்களை இரண்டு காரணியின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தின் பொருளாதார நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்கு. (06 புள்ளிகள்)

6. (i) கீழைத்தேசத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய இனத்தவர்கள் கீழே A, B, C எனத் தரப்பட்டுள்ளது. அவர்களின் வர்த்தக நிலையங்களை அதே ஒழுங்கில் தருக. (03 புள்ளிகள்)

A - போர்த்துக்கேயர்

B - பிரான்சியர்

C - பிரித்தானியர்

(ii) கண்டி இராச்சியத்தினைப் பிரித்தானியர் கைப்பற்றுவதற்குச் சாதகமாக இருந்த ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னனின் நடவடிக்கைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தமைக்கான காரணங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி. 1848 ஆம் ஆண்டு கண்டியில் ஏற்பட்ட இரண்டாவது சுதந்திரப் போராட்டம் தொடர்பாக கீழே A, B, C, D என்ற தலைப்புக்களில் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

A - போராட்டத்திற்கான பின்னணி

B - போராட்ட தலைவர்கள்

C - போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

D - போராட்டத்தின் விளைவு

7. (i) 1908 ஆம் ஆண்டிற்கு பின் இலங்கையில் யாப்புச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என கோரிக்கைகளை முன்வைத்த மூன்று சங்கங்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) கோல்புறூக் சீர்திருத்தத்திற்கு ஏற்ப இலங்கையில் உருவாக்கப்பட்ட நான்கு மாகாணங்களின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பில் உள்ளடக்கப்பட்ட அடிப்படை விடயங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கை சுதந்திரமடைந்ததின் பின் உருவாக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி III

8. (i) மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மூன்று நாடுகாண் பயணிகளின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) கீழே A, B, C, D எனத்தரப்பட்டவர்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் பங்களிப்புச் செய்த பிரதான துறைகளை அதே ஒழுங்கில் எழுதுக. (04 புள்ளிகள்)

A - மாட்டின் லூதர்

B - வில்லியம் ஷேக்ஸ்பியர்

C - லியானாடோ டாவின்சி

D - ரபாயல்

(iii) பிரித்தானியாவில் கைத்தொழில்களுக்குத் தேவையான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தமைக்கான இரண்டு காரணங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியினால்

A - அரசியல்

B - பொருளாதாரம்

C - சமூகம்

ஆகிய துறைகளில் ஏற்பட்ட இவ்விரண்டு மாற்றங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

9


(i) அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகள் மூன்று தருக. (03 ள்ளிகள்)


(ii) A- அமெரிக்கக் குடியேற்ற வாசிகளுக்கு பிரித்தானியரின் உதவி தேவைப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

B- அமெரிக்காவில் குடியேறுவதற்கு அனுமதி பெற்றவர்களுக்கு பிரித்தானிய அரசு விதித்த நிபந்தனைகள் இரண்டு தருக (04 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சி ஏற்படுவதற்கான இரண்டு சமூகக் காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக. ( 05 புள்ளிகள்)

(iv) ரஷ்யப் புரட்சி ஏற்பட்டமைக்கான மூன்று காரணங்களை உதாரணங்களுடன் விபரிக்குக. (06 புள்ளிகள்)




N